**Dated : 27.02.2026** (நேரம் : காலை 11.05 மணி)

**MC. No. 24/2025**

**PW 1 திருமதி. முத்துலெட்சுமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

எங்களுக்கு 30.10.2003 ம் தேதி திருமணம் ஆனது. நாங்கள் இருவரும் 22.04.2025 ம் தேதி முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எங்களுக்கு 18 வயதில் கரண் என்ற மகன் இருக்கிறார், அவன் 10 ம் வகுப்பு படித்திருக்கிறான். என் மகன் மதுரையில் ஒரு பெயிண்ட் கம்பெனியில் மாதம் சம்பளம் ரூ.25,000/– வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, மாதம் சம்பளம் ரூ.9,000/–த்திற்கு வேலை பார்த்தான், தற்போது வேலை பார்க்க முடியவில்லை என்று 3 மாதத்திற்கு முன்பு வந்துவிட்டான். எனது மகள் முபி ஸ்ரீ–க்கு 15 வயதாகிறது, அவள் 10 ம் வகுப்பு படிக்கிறாள். திருமணமாகி நான் கணவர் ஊரில் அவரது வீட்டில் ஒரு வருடம் குடியிருந்தேன். என் மாமனார் மற்றும் மாமியாருக்கு சுமார் 80 வயதுக்கு மேல் இருக்கும். தற்போது அவர்களை என் கணவர் தான் பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல, அவர்கள் தனியாக இருக்கிறார்கள். என் மாமனார் தோப்பை பார்த்துக்கொண்டு தனியாக வசிக்கிறார், அவரை என் கணவர் பராமரித்து வருகிறார். தற்சமயம் என் கணவர் கூலிக்கு மீன்பிடிக்கும் தொழில் செய்கிறார். அவருக்கு ஒரு நாளுக்கு ரூ. 600 கிடைக்கும் என்றால் சரியல்ல, ரூ. 1,500 முதல் ரூ.2,000/– வரை அவருக்கு கிடைக்கும். அவர் சொந்தமாக வைத்திருந்த வல்லம் பழுதடைந்துவிட்டது என்றால் சரிதான். நான் பிறந்த ஊர் சீனியப்பா தர்ஹா. நான் தற்போது குடியிருக்கும் வீடு என் கணவர் பெயரில் கிரையம் வாங்கிய இடத்தில் கட்டப்பட்ட வீடாகும். நான் என் மாமனார், மாமியாருடன் கூட்டுக்குடும்பாக இருக்கக்கூடாது என்றும், அவர்களை பராமரிக்க முடியாது என்றும், கூறி தான் சீனியப்பா தர்ஹாவிற்கு

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.27 17:07:12 +0530

எதிர்மனுதாரரை அழைத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. என் கணவர் தான் என்னை அங்கு கூட்டிச் சென்றார். நான் அடிக்கடி என் கணவருடன் சண்டையிட்டு கோபித்து கொண்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவேன் என்றும், பஞ்சாயத்து பேசியும், நான் என் பெற்றோர் வீட்டில் தான் இருப்பேன் என்று சொன்னேன் என்றும், அதனால் எங்களை சீனியப்பா தர்ஹாவில் குடியிருக்க அனுமதித்து அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. சீனியப்பா தர்ஹாவில் இருக்கும்போது எதிர்மனுதாரர் சிறிய படகு ஒன்றை வாங்கி நல்ல முறையில் மீன்பிடி தொழில் செய்து நல்ல முறையில் சம்பாதித்து வந்தார் என்றால் சரிதான். அந்த தொழிலிருந்து கிடைத்த வருமானத்தை வைத்து தான் என்னையும், குழந்தைகளையும் எதிர்மனுதாரர் நன்றாக பராமரித்து குழந்தைகளை நன்றாக படித்து வைத்தார். அவரது வருமானத்தை வைத்து என் பெயரில் 10 சென்ட் பிளாட் ஒன்றும், 12 சென்ட் பிளாட் ஒன்றும், 6 சென்ட் பிளாட் ஒன்றும் எதிர்மனுதாரர் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. நான் தற்போது குடியிருக்கும் வீடு அமைந்துள்ள 10 சென்ட் இடத்தை என் பெயருக்கு எழுதி கொடுத்ததால் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வேன் என்று பிரச்சினை செய்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரது பூர்விக சொத்துக்களை விற்று அதிலிருந்து கிடைத்த பணத்தை வைத்து தான் ஒவ்வொரு சொத்தையும் என் கணவர் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. நாங்கள் சீனியப்பா தர்ஹாவில் வசித்தபோது எதிர்மனுதாரரை வெளிநாட்டிற்கு சென்று அதிக பணம் சம்பாதிக்கும்படி அவரை வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. என்னுடைய கட்டாயத்தின் பேரில் எதிர்மனுதாரர் என் மாமனாரிடம் ரூ. 80,000/– கடன் பெற்றுக்கொண்டு வெளிநாடு சென்றார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வெளிநாட்டில் இருந்தபோது எனக்கு மாதம் ரூ.10,000/– அனுப்பினார். எதிர்மனுதாரர் சுமார் 8 மாதம் அல்லது அதிகபட்சம் 1 – 1/2 வருடம் வெளிநாட்டில் இருப்பார். அதற்கு மேல் அங்கு இருக்கமாட்டார். எதிர்மனுதாரர்

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.27 17:07:18 +0530

மீன்பிடி விசாவில் சென்று வெளிநாட்டில் மீன்பிடி வேலை பார்த்து வந்தார். இந்த விசா காலம் முடிந்தவுடன் அவர் தாய்நாடு தான் திரும்ப வேண்டும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அவ்வாறு வெளிநாட்டில் சம்பாதித்து ரூ.5,00,000/- வரை எனக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவர் அனுப்பிய பணத்தை வைத்து நான் கடனை அளிக்காமல் இருமேனி கிராமத்தைச் சேர்ந்த முனியசாமி என்பவருடன் சேர்ந்து கொண்டு ஆடம்பரமாக செலவழித்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வருமாறு கேட்டு அவர் என் மீது கீழக்கரை மகளிர் காவல்நிலையத்தில் 22.04.2025ம் தேதி ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அவர்கள் எங்களை விசாரித்துவிட்டு இருவரையும் சேர்ந்து வாழுமாறு சொல்லி இருவரிடமும் கையெழுத்து பெற்று கொண்டு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். மறுநாள் என் அப்பாவும், சகோதர்களும் சேர்ந்து எதிர்மனுதாரரை சொத்தை எழுதி கொடுக்குமாறு சொல்லி அடித்து காயம்படுத்தி அவர் இராமநாதபுரம், அரசு மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக என் தகப்பனார் மற்றும் சகோதரர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தற்போது தையல் தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல, கூலி வேலைக்கு தான் போகிறேன். தையல் தொழில் மூலம் மாதம் ரூ.30,000/- வருமானம் கிடைக்கிறது என்றால் சரியல்ல. என் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து அதில் அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டதால் அவரால் சரியாக எந்த வேலைக்கும் போகமுடியவில்லை என்றால் சரியல்ல. அவர் குடித்துவிட்டு மற்றவர்களிடம் சண்டை போட்டு கொண்டு அவர்கள் எதிர்மனுதாரரை அடித்ததில் தான் அவரால் முடியாமல் கிடக்கிறார். அவர் கூலிக்கு மீன்பிடி தொழில் செய்து கிடைக்கும் ரூ.600/- சம்பளத்தை வைத்து தான் அவரையும், அவரது வயதான பெற்றோரையும் பராமரித்து வருகிறார்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.27 17:07:24 +0530

என்றால் சரியல்ல. தற்போது எதிர்மனுதாரர் குழந்தைகளுக்காக எல்லாவற்றையும் மறந்து என்னுடன் சேர்ந்து வாழ நினைக்கிறார் என்றால் அவர் சீனியப்பா தர்ஹாவில் உள்ள வீட்டில் எங்களுடன் வந்து சேர்ந்து வாழ்ந்தால் நான் அதற்கு சம்மதிக்கிறேன். என் கணவர் வெளிநாட்டில் இருந்தபோது என்னுடைய நடவடிக்கை சரியில்லாமல் இருந்ததால் தான் அவர் எங்கள் ஊருக்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வெளிநாட்டில் இருந்து வந்து என்னையும், குழந்தைகளையும் அழைத்து கொண்டு எதிர்மனுதாரரின் சொந்த ஊரான களிமண்குண்டு ஊரில் உள்ள வீட்டில் நாங்கள் சுமார் 2 வருடங்கள் வசித்தோம். அந்த இரண்டு வருடங்கள் நாங்களும், எதிர்மனுதாரரின் பெற்றோரும் தனித்தனியாக தான் வசித்தோம். அவ்வப்போது எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டுக்கு சென்று அவர்களை பார்த்துக்கொள்வோம். என் மகள் வயதிற்கு வந்த நாளில் நான் ஊரில் இல்லை என்றும், அப்போது அவளை எதிர்மனுதாரரின் வயதான பெற்றோர் தான் பராமரித்து வந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அப்போது நான் ஒரு மாதம் கழித்து தான் ஊருக்கே வந்தேன் என்றால் சரியல்ல. அங்கு வசித்த 2 வருடம் எங்களுக்குள் பிரச்சினை இல்லாமல் தான் இருந்தோம் என்றால் 20 வருடங்களாக எந்த பிரச்சினையும் இல்லாமல் தான் வசித்து வந்தோம். தற்போது 2 வருடங்களாக தான் எதிர்மனுதாரர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து என்னை அடித்து, துன்புறுத்தி அரிவாளால் என்னை வெட்ட வந்து பிரச்சினை செய்து வருகிறார். எதிர்மனுதாரரை என்னை வெட்ட வந்தது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அப்போது எதிர்மனுதாரரை அழைத்து போலீசார் விசாரித்தார்கள். அதற்கு எதிர்மனுதாரர் நான் அவருடன் சேர்ந்து வாழ வரமாட்டேன் என்று சொல்வதால் அவ்வாறு செய்வதாக கூறினார். நான் செய்யும் தவறை எதிர்மனுதாரர் கண்டித்தால் நான் உடனே அதுபற்றி என் தகப்பனாரிடமும், சகோதரர்களிடமும் சொல்லி அவர்கள் எதிர்மனுதாரரை

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.27 17:07:32 +0530

அடித்து காயம்படுத்துவார்கள் என்றும், அதனால் தான் எதிர்மனுதாரர் என்னுடன் என் பெற்றோர் வீட்டிற்கு வந்து வசிக்க மறுத்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு மது குடிக்கும் பழக்கம் இல்லை என்றும், என்னுடைய நடவடிக்கை காரணமாக தான் எதிர்மனுதாரர் மது குடிக்க ஆரம்பித்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வயதான அவரது பெற்றோரை பராமரிக்க வேண்டிய பொறுப்புள்ளதால் அவரால் களிமண்குண்டை விட்டு வராமுடியாது என்றால் சரியல்ல. அதனால் நான் ஜீவனாம்சம் தொகை கேட்பது முறையல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.27 17:07:38 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.